**செய்தி வெளியீடு எண்:345** **நாள்: 02.06.2017**

**<u>செய்தி வெளியீடு</u>**

நாடு முழுவதும் ஒரே சீரான வரிவிதிப்பை ஏற்படுத்தும் நோக்கில் உருவாக்கப்பட்ட சரக்கு மற்றும் சேவை வரி (ஜிஎஸ்டி) விரைவில் அமுல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இதற்கான தகவல் தொழில்நுட்ப கட்டமைப்பு மற்றும் மென்பொருளை உருவாக்கும் பணியினை சரக்கு மற்றும் சேவை கட்டமைப்பு (GSTN) நிறுவனம் மேற்கொண்டுள்ளது. இந்த நிறுவனம் ஜிஎஸ்டி தொடர்பாக www.gst.gov.in என்ற இணைய தளத்தை உருவாக்கி உள்ளது.

தமிழ்நாட்டில் வரி செலுத்துவோர் அடையாள எண் (TIN) பதிவு பெற்ற அனைத்து வணிகர்களும் தாங்களாகவே இந்த இணைய தளத்தில் பதிவு செய்து வருகின்றனர். 04/01/2017 முதல் இப்பதிவை மேற்கொள்ளும் வசதி செய்யப்பட்டது. இந்த இணைய தளத்தில் பதிவு செய்ய தற்காலிக ஐடி (ID) மற்றும் பாஸ்வேர்டு (Password) வணிகர்களுக்கு மின்னஞ்சல் மற்றும் வணிகவரித்துறை இணையதளம் https://ctd.tn.gov.in மூலமாக வழங்கப்பட்டு வருகிறது. வணிகர்கள் இந்த தற்காலிக ஐடி (ID) மற்றும் பாஸ்வேர்டுடன் இணைய தளத்தை உபயோகப்படுத்தி இந்த பதிவை மேற்கொண்டு வருகிறார்கள். GST பதிவு செய்யும் இணையதளம் தற்காலிகமாக 01/05/2017 முதல் 31/05/2017 வரை நிறுத்தி வைக்கப்பட்டு மீண்டும் 01/06/2017 முதல் திறக்கப்படும். சரக்கு மற்றும் சேவை வரி அமுல்படுத்தப்படுவதை முன்னிட்டு அனைத்து பதிவு பெற்ற வணிகர்களும் GST இணையதளத்தில் இணையும் வசதி, நாடு முழுவதும் 15/06/2017 அன்று முடிவடைய உள்ளது.

தமிழ்நாடு வணிகவரித்துறையில் பதிவு பெற்ற வணிகர்கள் அனைவரும் GST இணைய தளத்தில் தங்களது Digital Signature Certificate (DSC) (நிறுவனங்கள் என்றால்) அல்லது ஆதார் எண் உதவியுடன் மின் கையொப்பமிட்டு (e-Signature) (உரிமையாளர் / பங்குதாரர் என்றால்) தங்களது விவரங்களை பதிவு செய்ய வேண்டும். ஏற்கெனவே GST

இணைய தளத்தில் விவரங்கள் பதிவு செய்த பெரும்பாலான வணிகர்கள் மேற்கூறப்பட்ட Digital Signature Certificate (DSC) / மின்கையொப்பத்துடன் பதிவு செய்யவில்லை.

எனவே அனைத்து வணிகர்களும் உடனடியாக GST இணையதளத்தில் தங்களது விவரங்களை Digital Signature Certificate (DSC) / மின்கையொப்பத்துடன் பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**